பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

32 ] சென்னை—ஞாயிறு, நவம்பர் 17, 1946. [ விலை. அணா. 2

## ஜீவாதாரமான மூன்று பொருள்கள்

தானியங்கள், எண்ணை வஸ்துக்கள், விறகு ஆகிய மூன்றும் கிராமத்திலுள்ள ஜனங்களுடைய வாழ்வுக்கு இன்றியமையாத வஸ்துக்களாகும். தற்சமயம் இந்த மூன்று வஸ்துக்கள் விஷயத்திலும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மூன்று விதமான பஞ்சத்தைத் தீர்ப்பதற்காக ஒரு யோசனையை நண்பர் ஒருவர் அனுப்பி இருக்கிறார். அவர் அவற்றை பஞ்சாப் சம்பந்தமாக எழுதியிருந்தபோதிலும் இந்தியாவிலுள்ள மற்ற பாகங்களிலும் அதே நிலைமை ஏற்பட்டிருப்பதால் அவை அந்த பாகங்களுக்கும் பொருந்தும். அவர் கூறும் யோசனைகளாவன :—

(1) நதியோரங்களிலும் ஓடைகள் ஓரங்களிலும் உள்ள நிலங்களில் இப்பொழுது நாணல் செடிகள் அதிகமாக வளர்ந்திருக்கின்றன. ராணுவத்தைக் கொண்டு அவற்றை நீக்கிவிட்டால் அந்த இடங்களைத் தானியங்கள் பயிராக்க உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அந்த இடங்கள் செழிப்பான இடங்கள். நன்றாக மாசூல்தரும். கால்நடைகளுக்கும் ஏராளமாக வைக்கோல் தரும்.

(2) அதுபோலவே சாலைகளின் ஓரங்களிலும் பயிர் செய்யப்படாமல் தரிசாகக் கிடக்கின்றன. இராணுவ இலாகா இந்த இடங்களில் தங்களிடமுள்ள தண்ணீர் பம்ப் மெஷின்களை உபயோகித்து பயிர் செய்ய ஏற்பாடு செய்யலாம். அல்லது அந்த மெஷின்களை விவசாயிகளுக்குக் கிடைக்கும்படி செய்து உதவி செய்யலாம்.

(3) பஞ்சாபில் அநேக புஞ்சைக் காடுகள் கல்லுங் கரடுமாகத் தரிசாகக்கிடக்கின்றன. கொஞ்சம்சிரமப் பட்டால் அவைகளைப் பண்படுத்தி ஆமணக்குச்செடிகள் பயிராக்கலாம். ஆமணக்குச்செடிக்கு அதிகமாக ஜலம் வேண்டியதில்லை. காற்றிலுள்ள ஈரத்தைக் கொண்டே வளரக் கூடிய செடி அது. ஆமணக்கு நெய் சோப் செய்வதற்கு அஸ்திவாரமான பொருளாகும். அதை உபயோகித்தால் இப்பொழுது சோப் செய்வதற்காக உபயோகிக்கப்படும் கடுகு நெய், எள் நெய், நிலக் கடலை நெய் போன்ற உண்பதற்கு உபயோகமான நெய்கள் உண்பதற்குக் கிடைக்கும்.

(4) கிராமங்களில் விறகுப் பஞ்சத்தால் ஜனங்கள் அடுப்பு எரிப்பதற்காக சாணத்தை உபயோகிக்கிறார்கள். அதனால் நிலத்திற்கு வேண்டிய உரம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகிறது. ஆதலால் விறகு கிடைப்பதற்காகவும், வீடு கட்டுவதற்கு வேண்டிய மரம் கிடைப்பதற்காகவும் ரோட் ஓரங்களிலும் வாய்க்கால் கரைகளிலும் மரங்களை வைத்து உண்டாக்கத் திட்டமான முயற்சிகள் செய்ய வேண்டும்.

(5) வாய்க்கால் கரைகளுக்குப் பக்கத்திலுள்ள நிலங்களில் ஜலம் ஊறி அந்த நிலங்கள் எப்பொழுதும் ஈரப்பசை உடையனவாக ஆகிவிடுகின்றன. அதனால் பயிர் செய்ய உபயோகமில்லாமல் போய் விடுகின்றன. அதைத் தடுப்பதற்காக வாய்க்கால் கரைகளின் உட்பக்கங்களில் செங்கல் பதித்து சிமெண்ட் பூசி தண்ணீர் கசியாமல் செய்ய வேண்டும்.

(6) குடும்பம் பெருகப் பெருக நிலங்கள் சிறு சிறு துண்டுகளாக பிரிக்கப்பட்டு விடுகின்றன. அதனால் விவசாயம் நாளுக்கு நாள் க்ஷீணித்துக் கொண்டு வருகிறது. ஆதலால் இனி மேல் இவ்விதம் துண்டு துண்டாக பிரிக்கப்படுவதைத் தடுக்கவும் இதற்கு முன் பிரிக்கப்பட்ட சிறு துண்டுகளை ஒன்று சேர்க்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(7) கையால் தண்ணீர் இறைத்து நிலங்களுக்குப் பாய்ச்சுவதை விட்டு விட்டு மெஷின் உதவியைக் கொண்டு தண்ணீர் பாய்ச்ச உதவி செய்யவேண்டும்.

இது போன்ற யோசனைகள் இன்னும் பல எழுதியிருக்கிறார்.

ஸோட்பூர் — 30-10-46 — பியாரேலால்

## பச்சைச் சிலுவைச் சங்கம்

பச்சைச் சிலுவைச் சங்கத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கலாம். ஒரு காலத்தில் அது ராணுவத் தொடர்பு மட்டுமே பெற்றிருந்தது. அத்துடன் அது சாம்ராஜ்ய வாசனையுடையதாகவும் இருந்தது; ஆனால் இப்பொழுது அது கஷ்டப்படும் மக்களுக்கு எல்லா விதமான ஆரம்ப சிகிச்சைகளும் செய்து வருகின்றது. ஆயினும் அதன் வேலைகள் அநேகமாக நகரங்களிலேயே நடைபெற்று வருகின்றன. இன்னும் அது இந்திய வாழ்வோடு சம்பந்தப்படவில்லை.

இங்கிலாந்தில் அநேக நல்ல காரியங்கள் வெற்றி பெறாமல் போவதுண்டு. அத்தகைய காரியங்களில் ஒன்றுபச்சைச் சிலுவைச் சங்கம். அதன் கௌரவ காரியதரிசி ஸ்ரீமதி எம். எச். மாரிஸன். அவருடைய விலாசம் 41, ஆஸ்மன்ஸ் பிளேஸ், லண்டன் வடமேற்கு, 11.

இந்தச் சங்கமானது ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தை ஆதரிக்கின்றது. அதன் அங்கீகாரத்துக்காகக் கீழ்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது ;—

(1) "ஒவ்வொரு தேசத்திலும் காணப்படும் புஷ்பங்கள் மிருகங்கள் பறவைகள் வளர்வதற்கு ஏற்ற இடங்களை தேசிய பூங்காவனமாக ஏற்படுத்திப் பாதுகாப்பதற்கு உடனே ஏற்பாடு செய்ய வேண்டியது ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் லட்சியங்களில் ஒன்றாகும்.

(2) தென் அமெரிக்காவிலோ ஆப்பிரிக்காவிலோ அல்லது ஆசியாவிலோ ஒரு சர்வதேச பூங்காவனம் ஏற்படுத்த வேண்டும். ஆசியாவில் திபெத் தேசத்தைச் சுற்றியுள்ள பெரிய மலைகளில் ஏற்படுத்துவதானால் பிரிட்டனும், சைனாவும், இந்தியாவும், ரஷ்யாவும்,

அமெரிக்காவும் அதன் தர்மகர்த்தர்களாக இருக்க வேண்டும் "

இந்த விதமாகத் தீர்மானம் செய்ய வேண்டுமென்று ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தைக் கேட்டுக் கொள்வதற்கு பச்சைச் சிலுவை சங்கத்தார் கூறும் காரணங்கள் வருமாறு:—

(1) உலோகாயுதக் கொள்கை உலக முழுவதும் வெறி கொண்டு வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுவதைத் தடுப்பதற்கு இப்பொழுது திட்டமாக முயற்சி செய்யவேண்டும்.

(2) ஒவ்வொரு தேசத்திலும் உள்ள காட்டுப் பறவைகள், காட்டு மிருகங்கள், காட்டு மரஞ்செடிகள், காட்டு இயற்கைக் காட்சிகள் அந்த தேசத்தின் பிதிரார்ஜிதச் சொத்தாகும். அவற்றின் அழகையும் பெருமையையும் காப்பாற்றவேண்டிய லக்ஷ்யத்தை ஐக்கியநாட்டு ஸ்தாபனம் மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். அதற்காக தேசீயப் பூங்காவனம் ஏற்படுத்தி அதனுள் மரஞ்செடிகளை வெட்டவும், பக்ஷிகளையும், மிருகங்களையும் வேட்டையாடவும் இடங் கொடாமல் பாதுகாக்க வேண்டும்.

(3) ஐக்கிய தேசங்கள் ஒவ்வொரு நாட்டையும் இப்படித் தூண்டுவதற்காகத் தென் அமெரிக்காவிலோ ஆப்பிரிக்காவிலோ, ஆசியாவிலோ, ஒரு சர்வதேசப் பூங்காவனம் ஏற்படுத்த வேண்டும். ஆசியாவில் திபெத் தேசத்தைச் சுற்றியுள்ள பெரிய மலைகளில் ஏற்படுத்துவதா யிருந்தால் பிரிட்டனும், சைனாவும், இந்தியாவும், ருஷ்யாவும், அமெரிக்காவும் இந்த இயற்கை வனங்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்காக தர்மகர்த்தர்களாக இருந்து பாதுகாவலாளர்களை நியமிக்க வேண்டும்.

(4) இந்த மாதிரிச் செய்தால் தூரத்தில் தெரியும் லக்ஷ்யம் கைகூடுவதற்கான வழியை மற்ற நண்பர்களும், அனுதாபிகளும், அக்கரை யுள்ளவர்களும் மேற்கொள்ள உதவியா யிருக்கும்.

இந்தத் தீர்மானத்தில் கையெழுத்துச் செய்தவர்களில் மிக முக்கியமானவர்கள் இங்கிலாந்திலுள்ள ராயல் கலா சங்கத்தின் தலைவரான சர். ஆல்பர்ட் ஜே. மன்னின்ஸ், லாராரைட் அம்மையார், உலகப் பிரசித்தி பெற்ற ஜார்ஜ் பெர்னாட் ஷா ஆகியோர் ஆவர்.

இந்தியாவிலும், ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் உள்ள பெரிய தலைவர்களும் கையெழுத்திட வேண்டுமென்று ஸ்ரீமதி. மாரிஸன் விரும்புகிறார். தீர்மானத்தை ஏற்றுக்கொள்கிறவர்கள், அவருக்குக் கடிதம் எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஸோட்பூர். — 2-11.46 — மோ. க. காந்தி.

## வாரக் கடிதம்

### ஒரு சந்தேகம்

நவகாளியில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி துன்பகரமான செய்திகள் கொஞ்சம் கொஞ்சமாக வந்துகொண்டிருந்தன. பக்ரீத் பண்டிகை சமீபித்துக் கொண்டிருந்தது. காந்தியடிகள் அந்தப் பண்டிகை கல்கத்தாவில் யாதொரு கலவரமுமின்றி நடந்தேறும் வரையிலாவது கல்கத்தாவிலேயே தங்கி இருக்கவேண்டுமென்று வங்காளத்தின் பிரதம மந்திரியும், மற்ற மந்திரிகளும் விரும்பினார்கள். வங்காளத்தில் நடக்கும் அட்டூழியங்களுக்கு மூல காரணம் கல்கத்தாவே தான் என்று அவரிடம் கூறப்பட்டது. மாகாணத்தின் தலை நகரத்தில் அமைதி ஏற்படுத்தப் பட்டால் அது மாகாண முழுவதும் நல்ல பலன் தருமென்று சொன்னார்கள். காந்தியடிகள் சம்மதித்தார். சென்ற வெள்ளிக்கிழமை மாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கூறியதாவது:—

" இந்தியா முழுவதிலும் நிலைமை சரியாக இல்லை. வங்காளத்தின் நிலைமை இன்னும் அதிக மோசமாயிருக்கிறது. இந்தச்சந்தர்ப்பத்தில் நம்முடையகடமை என்ன என்று கேட்கிறார்கள். எதை வேதசாஸ்திரங்கள் சொல்லுகிறதோ எதை ஞானிகள் அனுஷ்டிக்கிறார்களோ எதை அறிஞர்கள் வியாக்கியானம் செய்கிறார்களோ எதை ஹிருதயம் ஏற்றுக்கொள்ளுகிறதோ அதுதான் தர்மமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. முதல் மூன்று நிபந்தனைகளும் நிறைவேறினால்தான் நான்காவது நிபந்தனையை நிறைவேற்றமுடியும். ஒரு முட்டாளோ அல்லது ஒரு போக்கிரியோ கூறும் போதனை நம்முடைய மனதிற்குப் பிடித்ததாயிருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள நமக்கு உரிமை கிடையாது. இது தான் தர்மமென்று ஒருவர் போதிக்க வேண்டுமானால் அவர் அஹிம்சை பகையின்மை துறவு ஆகிய மூன்று குணங்களையும் பரிபூர்ணமாக உடையவராயிருக்க வேண்டியது அத்தியாவசியமாகும். அந்த மூன்றும் இல்லாதவர் கூறுவது தர்மம் ஆகாது.

நான் என்னுடைய கடமையாது என்பதைச் சொல்லி விட்டேன். உங்களுடைய கடமை யாது என்பதைப்பற்றி நீங்களே தான் முடிவு செய்து கொள்ள வேண்டும். நீங்கள் என்னைப்பின்பற்றிநடக்கவேண்டுமென்று நான் கூறவில்லை. நீங்கள் அகப்பட்டுக் கொண்டிருக்கும் கஷ்டமான நிலைமையில் உங்களுடைய கடமை யாது என்பதைக் கண்டு பிடிப்பதற்கு வேண்டிய வழியை நான் காட்டி விட்டேன். நீங்கள் கடவுளை மட்டும் நம்பி இருப்பீர்களே யானால் அந்த வழியை எளிதில் கண்டு கொள்வீர்கள் என்று பகவத்கீதை போதிக்கின்றது."

### ஒரு சந்தோஷமான முடிவு

இடைக்கால சர்க்காரிலுள்ள நான்கு மந்திரிகள் வங்காளத்தில் அமைதியை நிலை நாட்டும் விஷயத்தில் உதவி செய்வதற்காக கல்கத்தாவிற்கு விஜயம் செய்தது ஒரு நல்ல காரியமாயிற்று. அது நல்ல பலன் தந்தது. பெரிய நெருக்கடி ஏற்படுவதாக இருந்தது தற்சமயமேனும் தடுக்கப் பட்டுவிட்டது. அவர்கள் வந்தச் சமயமே கல்கத்தாவுக்கு வைசிராயும் வந்தபடியால் அநேக விதமான யூகங்கள் கிளம்பின. இடைக்கால மந்திரிகள் வங்காள மந்திரிசபை பலன் தரக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி செய்வதற்காக வைசிராயைக் கேட்டுக் கொள்வார்களா? அல்லது வங்காள கவர்னரை நெருக்குவார்களா? என்ற கேள்விகள் எழுந்தன. இவைகளைக் குறித்து காந்தியடிகள் பிரார்த்தனைக் கூட்டங்களில் பேசியவற்றின் சாரம் வருமாறு.—

" நாம் பரிபூர்ண சுதந்திரத்தைப் பெற முடிவு செய்திருக்கிறோம். பழி வாங்க விரும்புவதும் பாதுகாப்புக்காக வைசிராய், கவர்னர், ராணுவம், போலீஸார் இவர்களை எதிர்பார்ப்பதும் நம்முடைய தீர்மானத்திற்கு முரண்பட்டவைகளாகும். வைசிராயின் அதிகாரங்கள் இடைக்கால மந்திரி சபையிடம் அளிக்கப் பட்டிருக்கின்றன. வங்காள கவர்னரின் அதிகாரங்கள் வங்காள மந்திரிகளிடம் கொடுக்கப் பட்டிருக்கின்றன. சாசுவதமான அமைதி உண்டாகவேண்டுமானால் அது ஜனங்களுடையஹிருதயத்திலிருந்து தான் உற்பத்தியாக வேண்டும். உங்களுடைய ஹிருதயத்தில் தைரிய மில்லாவிட்டால் உங்களை யாராலும் காப்பாற்ற முடியாது. இதை நான் எத்தனை முறையோ சொல்லியாய் விட்டது. மனோதைரியம் உடையவர்களை யாராலும் மானபங்கப் படுத்த முடியாது. பழிவாங்க ஆரம்பித்தால் அது பழிக்குப் பழியாக வளர்ந்து கொண்டே போகும். ஒரு நாளும் முடிவு காண முடியாது. பழிவாங்க விரும்பினால் பரிபூர்ண சுதந்திரத்தைப்

அடிமைத் தனத்துக்கு அடிமையாயிருக்கும் வரை அடிமைத்தனம் போகாது. —காந்திஜி.

பெற முடியாது. யாரேனும் என்னைக் கொன்று விட்டால் நீங்கள் பழிவாங்க எண்ணி அவனைக் கொன்று விடுவதால் அடையும் லாபம் யாது? நீங்கள் யோசித்துப் பாருங்கள். காந்தியைத் தவிர காந்தியைக் கொல்லக் கூடியவர் யாரேனும் உண்டா? ஆன்மாவை யாராலும் கொல்ல முடியாது. ஆதலால் பழிவாங்கும் எண்ணத்தை அறவே விட்டு விடுங்கள். இதை மட்டும் தெளிவாக உணர்ந்து கொண்டால் பரிபூர்ண சுதந்திரத்தை அடையும் மார்க்கத்தில் காலை எடுத்து எட்டிப் போட்டு விட்டவர்கள் ஆவீர்கள்.''

**ஒரு வேண்டுகோள்**

இப்படிக் காந்தியடிகள் பழிவாங்கக் கூடாதென்று எச்சரிக்கை செய்து அதிக நாட்களாகவில்லை. அதற்குள் பீகாரில் புயற்காற்று கிளம்பும் சத்தம் கேட்க ஆரம்பித்து விட்டது. பழிவாங்க வேண்டுமென்ற கூச்சல் கிளம்பி விட்டது. அந்தக் கூச்சல் எவ்வளவு அறிவீனமானது என்பதை காந்தியடிகள் அடுத்த பிரசங்கத்தில் விவரித்துக் கூறினார்:—

''நான் மிகச் சிறு பிராயத்திலிருந்தே தீமையை வெறுக்கக் கற்றுக் கொண்டேனேயன்றி தீமை செய்தவரை வெறுக்கக் கற்றுக் கொள்ளவில்லை. ஆதலால் தான் முஸ்லிம்கள் எந்த விதமான தீங்கு செய்த போதிலும்கூட அவர்கள் என்னுடைய நண்பர்களாகவே இருந்து வருகிறார்கள். ஆயினும் அவர்கள் தீங்கு செய்தால் நீங்கள் தீங்கு செய்கிறீர்கள் என்று அவர்களிடம் கூற வேண்டியது என்னுடைய கடமையாகும். இந்த விதியையே என்னுடைய மிக நெருங்கிய அன்பர்களிடத்திலும் நண்பர்களிடத்திலும் அனுஷ்டித்து வருகிறேன். அந்த விதியையே உண்மையான நட்புக்கு உரைகல்லாகவும் மதிக்கின்றேன். பழி வாங்குவது சமாதானத்திற்கான வழி அன்று என்றும் மனிதப் பண்பு ஆகாதென்றும் உங்களிடம் கூறினேன். மன்னிப்பதையே தலை சிறந்த அறமாக ஹிந்து மத சாஸ்திரங்கள் போதிக்கின்றன. மன்னிக்கும் குணமே மனோதைரிய முள்ளவர்களுக்கு அழகு செய்வதாகும். நேற்று என்னைப் பார்ப்பதற்காக முஸ்லிம் அறிஞரான ஒரு நண்பர் வந்திருந்தார். அவர் குர்ஆனின் போதனையும் அதுவே தான் என்று சொன்னார். ஒரு நிரபராதியைக் கொன்றால் மனித ஜாதி முழுவதையும் கொன்ற பாவத்திற்கு உள்ளாவதாகவும் இஸ்லாம் மதம் கொலை, தீ வைத்தல், பெண்களைக் கடத்திச் செல்லல், பலாத்காரமாக மத மாற்றம் செய்தல் போன்றவைகளைக் கண்டிக்கிறதே யன்றி ஆமோதிக்கவில்லை என்பதாகவும் சொன்னார்.

ஒருவன் அடித்தால் அவனை மன்னிக்கக் கூடிய பெருந்தன்மையான மனமில்லாமலிருந்தால் அவனைத் திருப்பி அடிக்கலாம். ஆனால் அடித்தவன் ஓடிவிட்ட பிறகு பழிவாங்கும் எண்ணத்தோடு அவனுடைய பந்துவையோ அவனுடைய மதத்தைச் சேர்ந்தவரையோ அடிப்பது மனித கௌரவத்துக்குத் தாழ்ந்ததாகும்.

யாராவது என்னுடைய மகளைக் கடத்திக் கொண்டு போய்விட்டால் அதற்காக நான் கடத்திக் கொண்டு போனவனுடைய மகளையோ அல்லது அவருடைய நண்பருடைய மகளையோ கடத்திக் கொண்டு போகலாமா? அப்படிச் செய்தால் அது இழிவான காரியத்திலும் இழிவான காரிய மல்லவா? நோவாகாளியில் நடந்த இத்தகைய காரியங்களை முஸ்லிம் நண்பர்கள் கண்டித்திருக்கிறார்கள். பீகாரைப் பற்றி நான் கேள்விப்படுவது உண்மையானால் நான் அதைப்பற்றி என்ன சொல்வது?

அங்கு நடப்பதாகச் சொல்லும் செய்திகளைக் கேட்டு அளவற்ற வருத்தமடைகின்றேன். நான் பீகார் மாகாணத்திலுள்ள ஜனங்களை நன்றாக அறிவேன். பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்ற கூச்சல் காட்டுமிராண்டித் தனமாகும். நோவாகாளியில் நடக்கும் காரியங்களுக்காக பீகாரில் பழி வாங்குவது தவறு. பீகாரிலிருந்து பயந்துபோய் ஓடிய முஸ்லிம்களில் சிலரை பீகாரிலுள்ள ஹிந்துக்கள் கொலை செய்ததாகச் சொல்கிறார்கள். அதைக் கேட்டு நான் திடுக்கிட்டுப் போனேன். மகாபாரதமானது பழிக்குப் பழி வாங்கலாமென்று போதிப்பதாக சிலர் வாதிக்கிறார்கள். நான் அந்த வியாக்கியானத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன். வாளால் பெறும் வெற்றி வெற்றியாக மாட்டாது என்பதே மகாபாரதத்தின் ஹிதோபதேசமாகும். பாண்டவர்கள் பெற்ற வெற்றி பயனற்ற ஒருகாரியம் என்றே அந்தப் பெரிய நூல் போதிக்கின்றது.

நான் உங்கள் வங்காள மாகாணத்தின் பிரதம மந்திரியாகிய சாஹீத் சாஹிபை பல வருஷங்களுக்குமுன் பரித்பூர் என்னும் ஊரில் சந்தித்தேன். அப்பொழுது அவர் தம்மை என்னுடைய மகனாகச் சொல்லிக்கொள்வதில் பெருமை யடைந்தார்.

உங்களுக்கு அவர்மீது அநேக வருத்தங்க ளிருக்கலாம். ஆனால் அவர் அமைதியை விரும்புவதாகவே என்னிடத்தில் உறுதி கூறியிருக்கிறார். ஹிந்து நண்பர்களை இழக்க வருத்தமா யிருப்பதாகவும் சொன்னார். அவருடைய உறுதிமொழி உண்மை இல்லை என்று நிரூபிக்கப்படும் வரை நான் அதை நம்பாமல் இருக்க முடியாது. அந்த உறுதி மொழியைக் கொடுத்து அவர் தம்மை ஒரு சோதனைக்கு உட்படுத்தி யிருக்கிறார். சகல மக்களுடனும் நட்புக் கொள்வதும் சகல மக்களையும் ஒரே குடும்பத்தினராக மதிப்பதுமே பொன்போன்ற சிறந்த வழியாகும். எவர் தம்முடைய குடும்பம் வேறு மற்றவர் குடும்பம் வேறு என்று எண்ணுகிறாரோ அவர் சச்சரவுக்கும் மதவிரோதங்களுக்கும் வழி தேடியவராவார்''

சௌமொகானி — 8-11-46 — பியாரேலால்.

## ஒரு சுவையான கதை

வசந்த காலத்தில் ஒரு நாள் காலையில் ஒரு இடைப் பையன் தன்னுடைய ஆடுகளை பள்ளத்தாக்கில் மேய்த்துக்கொண்டு பாடிக்கொண்டும் ஆடிக் கொண்டு மிருந்தான். காட்டில் வேட்டையாடுவதற்காக வந்த அரசன் அவ்வளவு குதூகலமாயிருப்பதன் காரணத்தைக் கேட்டான்.

பையனுக்கு அரசன் என்று தெரியாது, ''நம்முடைய அரசர் என்னைவிட அதிகப் பணமுடையவராக இல்லை. அதனால் நான் சந்தோஷமா யிருக்கலாம் அல்லவா?'' என்று பதில் உரைத்தான்.

அதைக் கேட்டதும் அரசன் "அப்படியா? உன்னிடமுள்ள சொத்துக்கள் எல்லாம் எவை? சொல்லு, பார்ப்போம்" என்று சொன்னார்.

அதற்குப் பையன் "அழகான நீல வானில் அனுதினமும் உதயமாகும் சூரியன் அரசர்க்கு எவ்விதம் பிரகாசிக்கின்றதோ அவ்விதமே எனக்கும் பிரகாசிக்கின்றது. அவர்க்குப் போலவே எனக்கும் செடிகள் அழகாகப் பசுமை போர்க்கவும் மலர்கள் சொரியவும் செய்கின்றன. தினந்தோறும் எனக்கு வேண்டிய உணவு கிடைக்கின்றது. இதைவிட அரசனிடம் அதிகமாயுள்ளது வேறு யாது? சொல்லும், பார்ப்போம்'' என்று சொன்னான்.

அதைக் கேட்டதும் அரசர் திருப்தி யடைந்தவராக "பையா! நீ கூறுவது சரிதான். அரசரும் அப்படியேதான் சொன்னார் என்று நீ எல்லோரிடமும் சொல்லு'' என்று பையனிடம் கூறிவிட்டுச் சென்றார்.

(ஸ்பான்ஹீப் என்பவர் எழுதிய ஜெர்மன் கதைகளில் ஒன்று)

அடிமையாயிருக்கச் சம்மதிப்பவரே அடிமை —காந்திஜி.

தமிழ் ஹரிஜன்

நவம்பர் 17 ஞாயிறு 1946

## என் நம்பிக்கை

இங்கிலாந்தில் செல்வாக்குள்ள தினசரி பத்திரிகையின் டைரக்டர் ஒருவர் காந்தியடிகள் புதுடில்லியில் இருந்தபொழுது அவரைப் பார்க்க வந்திருந்தார். தம்முடைய பத்திரிகை இந்தியாவுக்கு நட்பு முறையில் உதவி செய்ய விரும்புவதாகக் கூறினார். அப்பொழுது காந்தியடிகள் கூறியதாவது:—

"கலகங்களைப் பற்றிய செய்திகளை பிரமாதப்படுத்திப் பிரசுரிப்பதால் எவ்வித பலனும் கிடையாது. இந்தக் காலத்தில் உண்மையை மறைத்து விடுகிறார்கள். பொய்யான கதைகளைக் கட்டி விடுகிறார்கள்."

அதற்கு அந்த ஆங்கிலேயர் "என்னுடைய பத்திரிகை அப்படிச் செய்வதில்லை" என்று கூறினார்.

அதன் மேல் காந்தியடிகள் :—

"நீங்கள் இந்தியாவுக்கு உண்மையாகவே சேவை செய்ய விரும்பினால் எவ்விதப் பாரபட்சமுமின்றி உண்மையான விஷயங்களை மறைத்து விடாமல் உண்மையான உருவத்தில் பிரசுரிக்க வேண்டும். நியாயமான காரியம் எதுவும் உண்மையை உரைப்பதால் ஒரு நாளும் கெட்டுப் போகாது"

ஆங்கிலேயர் :—இந்தக் கலகங்கள் எப்பொழுது நிற்கும்?

காந்தியடிகள் :—

குறைவதற்கான குறிகள் இன்னும் தோன்றவில்லை. ஆனால் நின்று போகும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இந்தக் கலகங்களைச் சிலர் வேண்டுமென்று மூட்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்று என் சொல்லை யாரும் கேட்காமலிருக்கலாம். ஆனால் பிரிட்டிஷ் துருப்புகள் இந்த நாட்டில் இருக்கும் வரை ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அவர்களுடைய உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதனால் இந்தத் தொல்லையும் இருந்து கொண்டுதானிருக்கும். சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு விளையக் கூடிய தீங்குகளில் இதைவிடப் பெரிய தீங்கு கிடையாது.

இதைக் கேட்டதும் வந்த நண்பருடைய ஆங்கில மனச்சாட்சி திடுக்கிட்டு விட்டது. அவர் கேட்டார் :—

பிரிட்டிஷார் சிக்கிரமாகத் தங்கள் துருப்புகளை கொண்டுபோய் விடவே விரும்புகிறார்கள். யார் தடுக்கிறார்கள்?

காந்தியடிகள் :—

உடனே பிரிட்டிஷ் துருப்புகள் போய்விடுவதற்கு எவ்விதத் தடையுமில்லை. யாரேனும் தடுப்பதாயிருந்தால் பிரிட்டிஷார்தான் தடுப்பவர்கள்.

சில கேள்விகளுக்குப்பின் அந்த ஆங்கிலேய நண்பர் இந்தியாவில் வியாபாரம் செய்யும் பிரிட்டிஷார் தடையாயிருப்பதை ஒப்புக்கொண்டார்; ஆயினும் அவர் கூறியதாவது:—

பிரிட்டிஷ் துருப்புகள் இருந்தால் இங்கே அமைதி ஏற்படாது என்று சொல்கிறீர்களே. ஆனால் அமைதியை நிலைநாட்டுவதற்காக அவர்களுடைய உதவியைத்தானே தினந்தோறும் நாடுகிறார்கள். அவைகளைப் போதுமானமட்டும் உபயோகிக்க வில்லை என்றல்லவோ குறை கூறப்படுகிறது?

காந்தியடிகள் :—

அந்தக் காரணத்துக்காகத் தானே நான் அவர்களை இங்கே இருக்கக்கூடாது என்று சொல்கிறேன். அவர்கள் இங்கே இருப்பது தடுப்பதற்காக அல்ல, தண்டிப்பதற்காகவே. கலகம் வந்த பிற்பாடுதான் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காக அவர்கள் உபயோகிக்கப் படுகிறார்கள். வருங் காலத்து ஆசிரியர்கள் நான் கூறுவதையே சரி என்று ஒப்புக்கொள்வார்கள். கிழக்கு வங்காளத்திலும் அமைதி நிலை நாட்டப்பட்டுவிடும். ஆனால் எவ்வளவு கொலையும் எவ்வளவு துன்பமும் ஏற்பட்ட பிறகு?

பிரிட்டிஷ் துருப்புகள் இந்தியாவில் இருப்பது, இந்தியாவைப் பாதுகாப்பதற்காக வல்ல, பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே யாகும். பிரிட்டிஷ் வியாபாரத்தை நாங்கள் விரும்பவில்லை. எங்கள் மீது கொண்டுவந்து திணித்து விட்டார்கள். இப்பொழுது பிரிட்டிஷ் சர்க்காரால் கூட அதை அசைக்கமுடியவில்லை. பிரிட்டிஷார் பரோபகாரிகளாக இங்கு வரவில்லை. இந்தியாவின் நன்மைக்காகவே அவர்களும் அவர்களுடைய துருப்புகளும் இங்கே இருந்து கொண்டிருப்பதாகச் சொன்ன போதிலும் அதற்காக அவர்கள் இருக்கவில்லை.

அதன் பிறகு அந்த நண்பர் அடிக்கடி யுத்தங்கள் வந்து கொண்டிருக்கின்றனவே அவைகள் வராமல் தடுப்பது எப்படி என்று கேட்டார்.

காந்தியடிகள் கூறிய பதில் :—

பெரிய தேசங்கள் பிறரைக்கெடுத்து வாழும் ஆசையையும் அதற்காக உபயோகிக்கப்படும் பலாத்காரத்தையும் அதன் சின்னமாகிய அணு குண்டையும் துறக்கும் வரை உலகத்தில் சமாதானம் என்பது உண்டாக மாட்டாது. நான் யுத்தம் நடந்த சமயத்தில் இந்த விஷயத்தை வற்புறுத்தி ஹிட்லருக்கும், பிரிட்டிஷ் ஜனங்களுக்கும், ஜப்பானியருக்கும் பகிரங்கக் கடிதங்கள் எழுதினேன். அந்தச் சிரமத்தை மேற்கொண்டதற்காக ஐந்தாம் படைக்காரன் என்ற பட்டம் சூட்டப் பெற்றேன்.

ஆங்கிலேயர் :—ஆனால் அஹிம்சை வெற்றி காண அதிகக் காலமாகுமே? இரண்டாம் போர்முனை ஏற்படாதிருந்தால் ரஷ்யா அழிந்து போயிருக்கும்.

காந்தியடிகள் :—இந்த வாதங்கள் அறிவுக்குப் பொருத்த மாயிருக்கலாம். ஆனால் அஹிம்சையைப் பற்றிய என்னுடைய நம்பிக்கை முன்னிலும் அதிகமாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஜனக் கூட்டங்கள் இமைப்பொழுதில் ஒரு கொள்கையிலிருந்து, மற்றொரு கொள்கைக்கு மாறிவிட்ட அற்புதங்களைப் பற்றி சரித்திரத்திலிருந்து எத்தனையோ சான்றுகள் கூறலாம். உதாரணமாக போயர் யுத்தத்தைப் பாருங்கள். பிரிட்டிஷார் ஒரே எதிர்ப்பாக இருந்தார்கள். ஆனால் இரண்டு வருஷகாலத்துக்குள் பிரிட்டிஷ் ஜனங்களுடைய அபிப்பிராயம் அடியோடு மாறி விட்டது. பானர்மென் பிரதம மந்திரியானதும் யுத்தத்தில் கிடைத்தவைகளை எல்லாம் கொடுத்து விட்டார்கள். சென்ற வருஷத்தில் இங்கிலாந்தில் தொழில் கட்சியார் தேர்தலில் பெருமிதமாக வெற்றியடைந்தது மற்றொரு நல்ல உதாரணமாகும். தேர்தலுக்கு முன் சர்ச்சிலை பிரிட்டிஷார் தெய்வமாகக் கொண்டாடி வந்தார்கள். அவர் வாயைத் திறந்தால் ஆடாமல் அசையாமல் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவ்வளவு நாவன்மையும் திறமையும் பெற்றிருந்தும் அவர் தேர்தலில் படுதோல்வி அடைந்து விட்டார். எல்லா சக்திகளும் அழிந்து போனாலும் கடவுளென்னும் சக்தி மட்டும் அழியாது என்பதில் நம்பிக்கை யுடைய என் போன்

ளுக்கு இந்த உதாரணங்கள் போதும். ஏசு கிறிஸ்து இரண்டாம் முறை வரப்போகிறார் என்பதில் எவ்வளவு நம்பிக்கையுடையவர்களாக சிலர் இருக்கிறார்களோ அது போலவே நானும் அஹிம்ஸையே வெல்லும் என்பதில் நம்பிக்கையுடையவனாக இருக்கிறேன். ஏசு கிறிஸ்து திரும்ப வருவார் என்று இரண்டாயிர வருஷமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அது கனவாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அசையாத நம்பிக்கை அது போல்தான் இருக்கும்.

## கதரின் தாய்

ஐக்கிய மாகாணத்தின் பொருளாதார தாவர ஆலோசகராயிருந்து பென்ஷன்வாங்கியுள்ள உத்தியோகஸ்தர் ஒருவர் காந்தியடிகளுக்குக் கீழ்கண்டவாறு எழுதுகிறார் :—

"கிராமத்து ஜனங்கள் நகரத்து ஜனங்கள் எல்லோரும் கதரையே உபயோகிக்கவேண்டும் என்று நீங்கள் கூறிவருகிறீர்கள். சர்க்கார் விவசாய இலாக்காக்கள் அயல் நாடுகளுக்கு அனுப்புவதற்காகவும் நம் நாட்டு மில்களுக்குக் கொடுப்பதற்காகவும் நம்முடைய நாட்டுப் பருத்தி தினுசுகளை விட்டு விட்டு அமெரிக்க நாட்டு மெல்லிய இழைப் பருத்தியையே அதிகமாக உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்கிறார்கள்.

இதுதான் பஞ்சாப் முழுவதிலும் நடந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காப் பருத்தி மில்களில் மிக மெல்லிய நூலை உற்பத்திசெய்ய உதவும் என்பது உண்மைதான். ஆயினும் நம்முடைய நாட்டுப் பருத்தியை உற்பத்தி செய்தால் கிராமங்களில் கூரை வேய்வதற்கு பருத்திமார் உபயோகமாவதோடு கைத்தறியில் நெய்யக் கூடிய நூலை நூற்பதற்கும் உதவும். நாட்டுப் பருத்தி தினுசுகளை தற்கால விஞ்ஞான முறைகளை அனுசரித்து அபிவிர்த்தி செய்து 22-நிர் நூல் கிடைக்கும்படி செய்யலாம்."

இந்தக்கடிதம் எழுதியவர் ஐக்கிய மாகாணப் பருத்தி ஆராய்ச்சிப் பண்ணையில் நாட்டுப் பருத்தியை அபிவிர்த்தி செய்வதில் வெற்றி பெற்றுள்ளார்.

மெல்லிய இழைப் பருத்தியை அரைத்தால் எவ்வளவு பஞ்சு கிடக்குமோ அதைவிட அதிக அளவு பஞ்சு கிடைக்கும் சாதாரண நாட்டுப் பருத்தியை அரைத்தால் என்றும் கூறுகிறார்.

அவருடைய ஆராய்ச்சியின் பயனாக 22 நிர் நூல் தரக்கூடிய மெல்லிய இழையும் 38 சதமானம் பஞ்சும் தரக்கூடிய பருத்தியை உண்டாக்க முடிந்திருக்கிறது.

அவர் மேலும் எழுதுகிறார் :—

"நான் 35 வருஷகாலம் இந்தியாவில் பருத்தி உற்பத்தியில் அனுபவம் பெற்றுள்ளேன். எகிப்து, அமரிக்கா முதலிய நாடுகளுக்குப் போய் பார்த்து வந்து மிருக்கிறேன். அதனால் தக்கபடி முயன்றால் நல்ல தினுசான பருத்தியை உற்பத்தி செய்ய முடியும் என்று உறுதி கூறுகின்றேன்."

அத்துடன் அவர் அபிவிர்த்தி செய்துள்ள புது தினுசான பருத்தியை மாதிரிக்கு அனுப்பியிருக்கிறார். அதை வெட்டித் திரிபோட்டு நூற்றுப் பார்த்ததில் 40-ம் நம்பர் நூல் கிடைத்தது.

ஆதலால் மாகாண சர்க்கார்கள் இந்த கிருபருடைய யோசனையைப் பரிசிலனை செய்ய வேண்டியது அவசியமாகும். ஆகவேகையினல் செய்யும்தொழிலுக்கும் மெஷினல் செய்யும் தொழிலுக்கு முள்ள வித்தியாசம் சாதனத்தை மட்டும் பொறுத்ததன்று; வேறு வேறு விதமான பொருளாதாரத் திட்டத்தையும் பொறுத்ததாகும் என்பது தெளிவாகின்றது. மில்களில் நூலை நூற்றுக் குவிப்பதற்காக நம்முடைய நாட்டுக் கைத்தொழில்களை நாசம் செய்துவிட்டோம். இந்திய மில்களுக்காகவும் அன்னிய நாட்டு மில்களுக்காகவும் நீண்ட இழைப் பருத்தியை உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டோம்.

மில்களில் நூற்பதற்கு ஏற்ற பருத்தி கைராட்டினத்தில் நூற்பதற்குத் தேவையில்லை என்பதை எல்லோரும் அறிவார்கள். கீழ் தரமான பருத்திதான் கைராட்டினத்துக்கு ஏற்றதாகும். இந்த விஷயம் 1864-ம் வருஷத்தில் பாரிஸில் நடந்த கண் காட்சியில் நடத்திய பரிசோதனையின் காரணமாக நிர்ணயம் செய்யப்பட்டது. இது விபரத்தை அறிய விரும்புகிறவர்கள் போர்ப்ஸ் வாட்ஸன் எழுதிய நூலைப் படித்தால் தெரிந்து கொள்வார்கள்.

ஆகவே நடுத்தரமான இழையும் அதிகப் பஞ்சும் தரக்கூடிய நாட்டுப் பருத்தி தினுசே கதரின் தாயாகும். கதரின் வெற்றிக்கு அதுவே இன்றியமையாத முதல் தேவையாகும்.

பியாரேலால்.

## கிராமக் கைத்தொழில்கள்

கிராமங்களில் செய்யக்கூடிய பொருள்களில் கதர் ஒன்று தான் சகல ஜனங்களுக்கும் இன்றியமையாத பொருளாகும். அத்துடன் அதுதான் பருத்தி உற்பத்தி முதல் துணி நெசவு வரை கோடிக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுத்து ரட்சிக்கக் கூடியது.

நெசவாளர்கள் நகரங்களில் வசிக்கிறார்கள். தரகர்கள் அவர்களைக் கெடுத்து வாழ்கிறார்கள். பொஜன சர்க்கார் அவர்களுக்கு வேண்டிய நூலைக் கொடுத்து அவர்களுடைய கைத்தொழிலைப் பாதுகாக்க முடியும். அப்படிச் செய்தால் அவர்கள் நகரங்களில் வசிக்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

ஆனால் மில்களில் உற்பத்தியாகும் பொருளைப் போல் கையால் செய்யும் பொருளை மலிவாக விற்க முடியுமா? அத்துடன் கதர் தவிர மற்றப் பொருள்கள் எல்லாம் நகரங்களிலேயே விற்கப்பட வேண்டியனவாகும். அங்கே விலையாக வேண்டுமானல் கிராமவாசிகள் அதிகமான கைத்திறமை உடையவர்களாக ஆகவேண்டும் இப்பொழுது கிராமங்கள் வெறுங் குப்பை மேடுகளாகவே காணப்படுகின்றன. ஆனல் வருங்காலத்தில் அவை சிறுசிறு சொர்க்கமாகத் திகழும். அங்குள்ளவர்கள் அறிவுடையவர்களாக இருப்பார்கள். அவர்களை யாரும் ஏமாற்றவோ கெடுக்கவோ முடியாது. இந்த விதமாகக் கிராமங்களைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு இன்று முதலே சரியான முறையில் காரியங்கள் செய்ய ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும்.

ஆனல் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில் கைத்தொழில், கலை, ஆரோக்கியம், கல்வி ஆகிய நான்கு விஷயங்களையும் தனித் தனியாகப் பிரித்துவிடலாகாது என்பதாகும். கைத்தொழில் மூலமாகவே கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதுதான் நயி தலீம் சங்கத்தின் இலட்சியமும் முறையுமாகும்.

மோ. க. காந்தி.

## குறிப்பு

மகாத்மா காந்தியடிகள் கிழக்கு வங்காளத்தில் நோவகாளிப் பகுதியில் இருப்பதால் இந்தவாரம் அவருடைய தலையங்கம் வந்து சேரவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

மனிதன் இதயம் ஊமையாயிருந்தாலன்றிக் கடவுள் செவிடாயிருப்பதில்லை —குலார்ல்ஸ்.

## பீஹார் முழக்கம்

பீகாரில் கலகத்தீ எறிய ஆரம்பித்திருப்பதாக பத்திரிகைகளில் கண்ட உடனே கல்கத்தாவிலிருந்து பாட்னாவுக்கு தம்முடன் சேர்ந்த மூன்று மந்திரிகளுடன் சென்றிருந்த பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு காந்தியடிகள் பீகார் பிரதம மந்திரிமூலமாக ஒரு தந்தி அனுப்பினார். நிலைமை அநேக இடங்களில் மோசமாயிருப்பதாகவும் அதை அடக்குவதற்கு சர்க்கார் தன்னால் இயன்றதனைத்தையும் செய்து வருவதாகவும் பண்டித ஜவஹர்லால்நேரு பதில் தந்தி அடித்தார். அத்துடன் அவர் சர்தார் அப்துர் ராப் நிஷ்டார் என்னும் மந்திரியுடன் எவ்வளவு நாள் இருக்கவேண்டியது அவசியமோ அவ்வளவு நாள் பீகாரில் தங்கி இருக்க தீர்மானித்துவிட்டதாகவும் எழுதியிருந்தார்.

அன்று காந்தியடிகளுக்கு மௌனதினமாகையால் அவர் மாலை பிரார்த்தனைக் கூட்டத்திற்கு கீழ்கண்ட செய்தியை எழுதிக்கொடுத்தார் :—

"காங்கிரஸ் மகாசபை ஜனங்களுக்குச் சொந்தமான ஸ்தாபனம். முஸ்லிம்லீக் நம்முடைய முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு சொந்தமான ஸ்தாபனம். காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் அதிகாரத்திலிருக்கும் மாகாணத்திலுள்ள முஸ்லிம்களை பாதுகாக்கத் தவறிவிட்டால் காங்கிரஸ் பிரதம மந்திரி இருப்பதால் என்ன பயன்? அதுபோலவே முஸ்லிம்லீக் ஆட்சி நடைபெறும் மாகாணத்திலுள்ள ஹிந்துக்களுக்கு முஸ்லிம்லீக் பிரதம மந்திரியால் பாதுகாப்பு அளிக்க முடியாவிட்டால் எதற்காகத்தான் முஸ்லிம்லீக் பிரதம மந்திரி இருக்கவேண்டுமோ தெரியவில்லை. காங்கிரஸ் பிரதம மந்திரி தம்முடைய மாகாணத்திலுள்ள முஸ்லிம் சிறுபான்மையோரை பாதுகாப்பதற்காக ராணுவத்தை உபயோகித்தாலும், முஸ்லிம்லீக் பிரதம மந்திரி தம்முடைய மாகாணத்திலுள்ள ஹிந்து சிறுபான்மை யோரைப் பாதுகாப்பதற்காக ராணுவத்தை உபயோகித்தாலும் நெருக்கடியான சமயம் ஏற்படும்பொழுது அவர்களுக்கு ஜனங்களை அடக்குவதற்கு வேண்டிய சக்தி இல்லை என்பதுதான் பொருளாகும். அப்படியானால் இரு கட்சியாரும் பிரிட்டிஷாரையே இந்தியாவில் இருந்துஆட்சி செய்யும்படி கேட்டுக் கொள்வதாகத்தான் அர்த்தமாகும். இது நம்மில் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு விஷயமாகும்.

போக்கிரிகள் செய்தார்கள் என்று கூறி நாம் தப்பித்துக்கொள்ளப் பார்க்கும் வழக்கத்தை நான் முற்றிலும் வெறுக்கின்றேன். நாம் எப்பொழுதும் போக்கிரிகள் மீதே பாரத்தைப் போட்டுவிடுகிறோம். ஆனால் போக்கிரிகளைச் சிருஷ்டித்ததற்கும் அவர்களுக்கு ஆதரவு கொடுத்ததற்கும் நாம்தான் பொறுப்பாளிகள். ஆதலால் செய்யப்பட்ட தவறான காரியங்களெல்லாம் போக்கிரிகளின் வேலை என்று கூறுவது சரியன்று."

### சுதந்திரமே வெளியேறுக

இந்த எச்சரிக்கையை காந்தியடிகள் இன்னும் அதிக பலமாக மறுநாள் பிரசங்கத்தில் கீழ்க்கண்டவாறு வற்புறுத்திக் கூறினார் :—

"முஸ்லிம்கள்தானே அக்கிரமங்கள் செய்ய ஆரம்பித்தார்கள் என்று ஹிந்துக்கள் சொல்லக்கூடும். ஆனால் இப்படிச்சொல்லித் தப்பித்துக்கொள்ள பார்க்கக் கூடாது நீங்கள் உங்கள் கடமையை எண்ணிப் பார்க்கவேண்டும். என்ன நேர்ந்தாலும் நாங்கள் ஒன்றும் செய்ய மாட்டோம் என்று நீங்கள் உறுதியாகச் சொல்லவேண்டும். இன்று என்னிடம் வந்திருந்த முஸ்லிம்கள் சமாதானத்தை விரும்புவதாகவே உறுதி கூறினார்கள். அவர்களெல்லோரும் பொறுப்பு வாய்ந்தவர்கள். சண்டைபிடித்து பாகிஸ்தானைப் பெற முடியாதென்று தெளிவாகச் சொன்னார்கள். இரு கட்சியாரும் சண்டைபோட்டுக் கொண்டிருந்தால் பரிபூர்ணமான சுதந்திரம் மாயமாக மறைந்து போகும். பிரிட்டிஷ் சர்க்காரோ அல்லது வேறு சர்க்காரோ ஏதேனும் மூன்றாம் மனிதன் ஒருவனே இந்தியாவில் ஆட்சிசெய்து கொண்டிருப்பான். இந்தியா மிகவும் விசாலமான தேசம். உலோகங்களிலும் வாசனைத் திரவியங்களிலும் செழிப்புடையது. இந்தியா உற்பத்தி செய்யாத பொருள் எதுவும் கிடையாது. சண்டை போட்டுக் கொண்டேயிருந்தால் இந்தியாவுக்கு வந்து இந்தியர்களைக் காப்பாற்றுவதாகச் சொல்லி இந்தியாவிலுள்ள செல்வங்களைக் கொள்ளை கொண்டு போகவேண்டுமென்ற ஆசை உலகத்திலுள்ள வல்லரசுகளுக்கு உண்டாகிவிடும்.

நாம் பரிபூர்ண சுதந்திரம் பெற விரும்புகின்றோம். நமது நாட்டிற்கு காங்கிரஸ் மகா சபையானது எத்தனையோ பெரிய காரியங்களைச் செய்திருக்கின்றது. ஆதலால் அந்தச் சபைக்காக நீங்கள் உங்கள் உடல்பொருள் ஆவி எல்லாவற்றையும் தியாகம் செய்ய சித்தமாயிருக்கின்றீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் 60 வருஷ காலத்துக்கு அதிகமாக காங்கிரஸ் மகாசபை செய்த நல்ல காரியத்தை அரை நொடியில் அழித்துவிடப் போகிறீர்களா? அஹிம்ஸையை அனுஷ்டிப்பதற்கு வேண்டிய மனோதைரியமில்லாமலிருந்தால் நீங்கள் அடிப்பவர்களை அடிக்கலாமென்று நான் உங்களுக்குச் சொல்லி இருக்கிறேன். ஆனால் பலாத்காரத்தை உபயோகிக்கும் விஷயத்திலும் ஒரு தர்ம முறை உண்டு. அந்த முறையை அனுஷ்டிக்காவிட்டால் பலாத்காரத் தீயானது தன்னை மூட்டியவர்களையும் அழித்து விடும். நீங்கள் எல்லோரும் அழிந்து போனாலும் நான் கவலைப்பட மாட்டேன். ஆனால் இந்தியாவின் சுதந்திரத்தை அழிப்பதை மட்டும் நான் ஒரு நாளும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

பீகாரில் நடப்பதாகச் சொல்லப்படும் காரியங்கள் உண்மையாயிருக்குமானால் மிகுந்த மோசமானதேயாகும். அத்தகைய காட்டுமிராண்டித்தனத்தை மத்திய சர்க்கார் ஒருநாளும் அனுமதிக்காது என்று பண்டித ஜவஹர்லால் நேரு தவறு செய்த கட்சியாருக்கு சொல்லி இருக்கிறார். அவர் கலகத்தை அடக்குவதற்காக ஆகாயவிமானங்களிலிருந்து வெடிகுண்டு போடக்கூடத் தயாராயிருக்கிறார். ஆனால் அது பிரிட்டிஷாருடைய வழியாகும். காங்கிரஸ் ஜனங்களுடைய ஸ்தாபனம். அது எந்த ஜனங்களுடைய பிரதிநிதியாக இருக்கிறதோ அந்த ஜனங்களை அழிப்பதற்காக அந்நிய சர்க்கார் உபயோகித்து வரும் அழிவுமுறையையே காங்கிரஸ் ஸ்தாபனமும் உபயோகிக்கப் போகின்றதா? ராணுவத்தின் உதவியைக் கொண்டு கலகத்தை அடக்குவார்களானால் இந்தியாவின் சுதந்திரத்தையும் அடக்கியவர்கள் ஆவார்கள். காங்கிரஸ் கூறுகிறபடி ஜனங்கள் கேட்காவிட்டால் ஜவஹர்லால் நேரு என்ன செய்வதென்று கேட்கக்கூடும். ஜனங்கள் கட்டுப்பாட்டிற்கும் அறிவுக்கும் அடங்கி நடக்காவிட்டால் அவர் மந்திரி பதவியைத் துறந்து விடுவதுதான் சரியான மார்க்கமாகும்.

ஒருவர் அக்கிரமம் செய்தால் அதற்காக அவருடைய பந்துக்களிடமோ அல்லது அவருடைய மதத்தைச் சேர்ந்தவர்களிடமோ பழிவாங்குவது கோழைத்தனமான செயல்களாகும். அத்தகைய காரியங்களில் இறங்கினால் பரிபூர்ண சுதந்திரத்துக்கு விடை கொடுத்தனுப்பிவிட வேண்டியதுதான்.

**பிறரைத் தாழ்த்துபவன் தானும் தாழ்ந்து போவான். —காந்திஜி.**

இப்படிக் கெட்ட காலத்தில் நாம் வசித்து வந்த போதிலும் இடை இடையே கடவுளுடைய அருள் சிறிது சிறிதாகக் கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது. பக்ரீத் பண்டிகை இந்தியா முழுவதிலும் எவ்விதக் கலவரமுமின்றி நடந்தேறியது ஆறுதல் அளிக்கின்றது. ஆனால் பீஹார் சமாசாரம் என்னுடைய மனத்தைக் கலைத்து வருகிறது. முதன் முதலாக சத்தியாக்கிரகமானது இந்தியாவில் முளைத்த இடம் பீஹார்தான். அங்குதான் என்னுடைய இந்திய அரசியல் வாழ்வு ஆரம்பமாயிற்று. அந்த மாகாணத்திலுள்ள ஜனங்களுக்காக நான் சோர்வின்றி உழைத்திருக்கிறேன், அந்த ஜனங்கள் என்மீது அன்பை மழையாகப் பொழிந்திருக்கிறார்கள். பிரிஜ் கிஷோர் பாபுவையும், ராஜேந்திர பாபுவையும் பெற்றெடுத்ததும் பீஹார்தான். அந்த மாகாணத்திலுள்ள ஜனங்கள் இப்பொழுது வெறிகொண்டு தவறான காரியங்களில் இறங்கி இந்தியாவின் புகழை மாசுப்படுத்தி விட்டார்கள். இந்தியாவிலுள்ள ஜனங்கள் ஆங்கிலேயர்களைக் கொல்ல ஆரம்பித்தால் அந்த நிமிஷமே நான் இறந்துவிடுவேன் என்று பலமுறை சொல்லி இருக்கிறேன். அப்படி இருக்க நம்முடைய உடன் பிறந்த சகோதர்களாகிய நிரபராதிகளாகிய முஸ்லிம்களைக் கொல்வதை நான் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

காந்தியடிகள் ஞாயிற்றுக்கிழமை 4ந்தேதி ராஜகுமாரி அமிர்தகௌரிக்கு அனுப்பிய கடிதத்தில் கீழ்கண்டவாறு எழுதியிருந்தார் :—

"நான் கல்கத்தா வந்து சேர்ந்ததும் தேகாரோக்கியத்தின் காரணமாகக் குறைந்தஅளவு உணவு பால் இல்லாமல் சாப்பிட ஆரம்பித்தேன். பின்னர் ஆரோக்கியம் அடைந்து விட்ட போதிலும் அந்த மாதிரி உணவையே உண்ணும்படி தேசத்தில் நடைபெறும் காரியங்கள் செய்துவிட்டன. இப்பொழுது பீஹாரின் நிலைமை சீக்கிரமாகத் திருந்தாவிடில் நான் பரிபூர்ணமாக உண்ணாவிரதம் மேற்கொள்ளும்படி ஏற்படும். அதற்குக் காலவரையறை இல்லை. மனதைப் புண்படுத்திக் கொள்ள வேண்டாம். எனக்கு உண்ணாவிரதமிருந்து என்னுடைய கொள்கையை நிலை நாட்டுவதற்கு வேண்டிய சக்தி எனக்கு இருப்பதற்காக சந்தோஷப் படவே வேண்டும்."

மறுநாள் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு அனுப்பிய கடிதத்தில் காந்தியடிகள் கூறியதாவது :—

"பீஹாரிலிருந்து வரும் செய்திகள் என்னை ஒரு குலுக்கு குலுக்கி விட்டன. என்னுடைய கடமை யாது என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகின்றது. எனக்கும் பீஹாருக்கும் நெருக்கமான உறவு உண்டு. அதை நான் எப்படி மறக்க முடியும். நான் கேள்விப்படுவதில் பாதி மட்டும் உண்மையாயிருந்தால் கூட பீஹார் மகாஜனங்கள் மனிதப் பண்பை மறந்து விட்டார்களென்றே ஏற்படும். எல்லாம் போக்கிரிகளுடைய செயல் என்று அவர்கள் மீது பழியைச் சுமத்துவது பொய்யான காரியமாகும். நான் உண்ணாவிரதத்தைத் தடுக்க மிகுந்த பிரயாசைப்பட்ட போதிலும் இனி மேல் தடுக்க முடியாது. 'அறிவில்லாமல் செய்யும் இந்தக் கொலை பாதகங்களை இனி எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? ஜனங்கள் பகல் வெளிச்சம் போல் தெளிவாய் இருப்பதைப் பார்க்க மறுத்து நீ சொல்வதற்கு செவி சாய்க்காமலிருந்தால் அதிலிருந்து நீ இருக்க வேண்டியதில்லை என்று தெளிவாகத் தெரிகிறதல்லவா?' என்று என்னுடைய அந்தராத்மா கேட்கின்றது. இந்த வாதம் சரியானது. உண்ணாவிரதம் மேற்கொள்ளாமலிருக்க முடியாது. ஆதலால் இந்தப் பேயாட்டம் நிற்காவிட்டால் இறக்கும்வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாக நான் ஒரு அறிக்கை வெளியிட எண்ணி இருக்கிறேன். அதைக் கொஞ்ச காலத்துக்குத் தாமதித்து வைத்திருப்பேன். நீங்கள் டில்லியில் அதைப் பற்றிக் கேட்டபொழுது அந்தச் சமயம் நான் சிந்திக்கவில்லை என்று பதில் சொன்னேன். ஆனால் இப்பொழுது நிலைமை மாறி இருக்கிறது. நீங்கள் வேறு விதமாக நினைத்தால் நீங்கள் என் மனத்தை மாற்றலாம். நீங்கள் எது சொன்னாலும் நான் அதைப்பொருட்படுத்தாமலிருக்க மாட்டேன். ஆனால் என்னுடைய சுபாவம் உங்களுக்குத் தெரியும். ஆகலால் நான் செய்ய உத்தேசிக்கும் காரியத்தை நீங்கள் நிச்சயமாக ஆதரிப்பீர்கள் என்று எண்ணுகிறேன். எது எப்படியாயினும் நான் இறந்து போவேனோ என்ற எண்ணமில்லாமல் அந்த பொறுப்பைக் கடவுளிடம் விட்டு விட்டு நீங்கள் உங்கள் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். வீணாக மனத்தில் சஞ்சலத்திற்கு இடம் கொடுக்க வேண்டாம்."

இந்தக் கடிதத்தின் நகல் ஒன்று சர்தார் வல்லபாய் படேலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆயினும் அவரும் பண்டித ஜவஹர்லால் நேருவும் உண்ணாவிரதமிருக்க வேண்டாமென்று தடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. எந்த லட்சியத்திற்காக உண்ணாவிரதமிருக்க காந்தியடிகள் எண்ணுகிறாரோ அந்த லட்சியத்தின் மகோன்னதமான மகிமையை இவர்கள் இருவரும் நன்றாக உணர்வார்கள். இந்தியாவின் பரிபூரண சுதந்திரம்தான் அந்த லட்சியம்.

காந்தியடிகள் தற்சமயம் பீஹாருக்கு வர வேண்டிய அவசியமில்லை என்று தாம் எண்ணுவதாக பண்டித ஜவஹர்லால் நேரு பாட்னாவிலிருந்து டெலிபோன் மூலம் காந்தியடிகளுக்குச் செய்தி அனுப்பினார். அத்துடன் நான் எவ்வளவு நாள் இங்கே இருக்க வேண்டியது அவசியமோ அவ்வளவு நாள் இங்கே இருக்கப் போகிறேன் என்றும் இப்போது நான் இருக்க வேண்டிய இடம் டில்லி அன்று பீஹார்தான் என்றும் கூறினார்.

காந்தியடிகள் 6-ந் தேதியன்று நோவாகாளிக்குப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன் அன்று காலையில் பண்டித நேருவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட அறிக்கையை வெளியிட்டார். அது பத்திரிகைகளில் வெளி வந்திருக்கிறது.

சௌமொகானி, — 8-11-46 — பியாரேலால்

## ஒரு நல்ல முறை

க்ரீஸ் தேசத்தில் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் சாக்ரட்டீஸ் என்ற பெரிய ஞானி ஒருவர் இருந்தார். அவரை ஒரு முரடன் அவருடைய நண்பர்கள் முன்னிலையில் காலால் உதைத்தான். அப்பொழுது சாக்ரட்டீஸ் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். அதைக் கண்ட நண்பர்களில் ஒருவர் இதென்ன, இப்படிச் சும்மா யிருக்கிறீர்களே என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

அதற்கு சாக்கிரட்டீஸ் "என்னை ஒரு கழுதை உதைத்துவிட்டால் நான் உடனே வருத்தப்பட்டுக் கொண்டு மாஜிஸ்திரேட்டிடம் போய் அதைத் தண்டிக்கும்படி வேண்டிக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறீரா?" என்று கேட்டார்.

வி. ஜி. தேசாய்

## கணவனுக்காக மனைவி நூற்றல்

வெகு காலமாகப் பத்திரிகைத் தொழில் நிபுணராயுள்ள பண்டித பனாரஸிதாஸ் சதுர்வேதி "மதுகரம்" என்ற மிகச் சிறந்த ஹிந்தி மாஸிகை ஒன்று நடத்தி வருகிறார். அதன் பிரதான நோக்கம் பண்டில்கண்ட் பிரதேசத்திலுள்ள நாடோடிப் பாடல்கள் கதைகள் முதலியவற்றைப் பாதுகாப்பதும் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றுவதுமே யாகும்.

"மதுகரம்" மூன்றாவது வால்யம் நான்காவது இதழில் "ஸ்வதந்திரா" என்னும் நூலிலுள்ள ஒரு பழைய பண்டில்கண்ட் பாடல் காணப்படுகிறது. கணவன் மனைவியைப் பிரிந்து அயலூர் சென்றிருக்கிறான். மனைவி தன் தோழியைப் பார்த்துக் கீழ்கண்டவாறு கூறுகிறாள் :—

"தோழி! என் மைத்துனியின் சகோதரர் ஊரில் இல்லை, என் வாழ்நாள் வீணாய்க் கொண்டிருக்கின்றது. அவர் இருந்தால் என்னுடைய ராட்டினத்தை முற்றத்தில் தூக்கிவைத்து நல்ல அழகான நூல் நூற்பேன். அதைக்கொண்டு தாமரை மலர் போன்ற துணி நெய்யச் சொல்லி, என் காதலர்க்கு உருமால் கட்டி மகிழ்வேன். அந்த உருமாலுடன் அவர் ராஜ சபையில் அழகாக வீற்றிருப்பார், எல்லோரும் அதைக் கண்டு ஆச்சர்யப்படுவார்கள். அந்த விதமாக நான் நெற்றியில் திலகம் இட்டதின் பயனை அடைவேன்"

நூறு வருஷங்களுக்கு முன் நம்முடைய நாட்டுப் பெண்கள் தங்கள் கணவருக்கு அறுசுவை உணவு அளித்ததோடு அழகான உடையும் அளித்து வந்தார்கள். ஹிஸ்ஸார் ஜில்லாவிலுள்ள நிநாத் என்னும் ஊரில் வசித்துவரும் திரு. முரளிதார் அக்கம் பக்கத்திலுள்ள சிறுமிகள் குளிர்காலத்தில் ஒன்றாக உட்கார்ந்து வெயில் காய்ந்துகொண்டு நூல் நூற்றதைத் தாம் தம்முடைய சிறுவயதில் கண்டதாகக் கூறுகிறார். அவர்கள் பாட்டுப் பாடிக்கொண்டே நூற்பார்களாம். மற்றக் காலங்களில் அவர்கள் இரவில் ஒன்றாக உட்கார்ந்து நூற்பார்களாம். இப்போது கூட ஹிஸ்ஸார் ஜில்லாவில் மணமகளுக்குச் சீதனம் கொடுக்கும்போது அதில் இன்றியமையாத அம்சமாயிருப்பது கைராட்டினம் தானும். மணமகளும் கையால் நூற்று கையால் நெய்த உடையைத் தான் அணிந்திருப்பாளாம்.

வி. ஜி. தேசாய்.

## மத்திய இந்தியாவில் ஹரிஜன சேவை 1944—45

ஹரிஜன சேவை சம்பந்தமாக மத்திய இந்தியா விசேஷமாக அதிர்ஷ்டம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இந்தூர் மகாராஜா யஷ்வந்த்ராவும், குவாலியர் மகாராஜா ஜிவாஜிராவ் ஷிண்டும், ரேவா மகாராஜா குலாப் ஸிங்கும் ஹரிஜனங்களுடைய உரிமைகளைக் குறித்துப் பிரகடனங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த மூன்று சமஸ்தானங்களிலும் சேர்த்து ஜனத் தொகை சுமார் 70 லட்சம், விஸ்தீரணம் சுமார் 50 ஆயிரம் சதுர மைல். ஆகவே மத்திய இந்தியா கத்தியவாட் பிரதேசத்தை விட முன்னேற்றம் உடையதாகக் காணப்படுகிறது. கத்தியவாட்டில் லாத்தி என்னும் சமஸ்தானத்தில் மட்டுமே இவ்விதமான பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வருஷத்திலேனும் இதர சமஸ்தானங்களும் சின்னஞ் சிறிய லாத்தி சமஸ்தானத்தைப் பின் பற்றி நல்ல காரியங்கள் செய்யும் என்று நம்புவோமாக!

ஹரிஜன சேவா சங்கத்தின் இந்தூர் கிளை 1945 மார்ச் முதல் தேதியன்று ஹரிஜன தினம் கொண்டாடிய பொழுது ஹரிஜனங்கள் கோவில்களுக்குள் போகவும் ஹிந்து விடுதிகளில் உண்ணவும் அனுமதிக்கப் பட்டார்கள். ராவ்பகதூர் சேத் ஹரிலால்ஜி தாமும் தம்முடன் சேர்ந்த மில் முதலாளிகளும் தங்கள் லாபத்தில் 5 சதமானத்தை ஹரிஜனங்கள் உள்படத் தங்கள் தொழிலாளர்கள் அனைவர்க்கும் வீடு கட்ட உபயோகிக்கப் போவதாக மில் முதலாளிகளின் சார்பில் வெளியிட்டார். அந்த 5 சதமானம் சுமார் 75 ஆயிரம் ரூபாய் ஆகும். அதை உடனேயே வீடு கட்ட உபயோகிப்பார்கள் என்று நம்புகிறேன். 250 பிகா விஸ்தீரணமுள்ள நிலம் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்காக வாங்கப்பட்டிருக்கிறது. இந்தூர் கிளைச் சங்கம் கையால் கடுதாசி செய்யும் தொழிற்சாலை ஒன்று நடத்தி வருகிறது. அதில் பல ஹரிஜனக் குடும்பங்கள் வேலை செய்கின்றன. அறிக்கை முழுவதும் கையால் செய்த கடுதாசியிலேயே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிளைச் சங்கம் இரண்டு புது தினுசான எண்ணெய் ஆட்டும் செக்குகளும் ஏற்படுத்தி ஹரிஜனங்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள்.

எங்கெல்லாம் கழிவு கடுதாசி கிடைக்குமோ அங்கெல்லாம் கையால் கடுதாசி செய்யும் தொழிலை ஏற்படுத்த வேண்டும். சகல ஊர்களிலும் சுத்தமான எண்ணெய்கிடைப்பதற்காகச் செக்குகள் ஏற்படுத்துவது அவசியம்.

குவாலியரிலுள்ள ஹரிஜன சேவா சங்கத்தின் கிளையானது உஜ்ஜயினியில் நடந்த சிம்ஹஸ்தா திருவிழாவில் நல்ல விதமாகப் பிரசாரம் நடத்திற்று. அநேக சாதுக்கள் உதவி செய்தார்கள். அவர்களில் பிரதானமானவர் அயோத்தியா ஹனுமான் கட்டத்திலுள்ள ஆச்சாரியா ஜானகி தாஸ்தியாவார். சென்ற வருஷம் அரசியலில் புகுந்துவிட்ட திரு. கிருஷ்ணதாஸ் தத்தே மறுபடியும் தம்முடைய பழைய காதல் விஷயமாகிய ஹரிஜன சேவையைச் செய்ய வந்திருக்கிறார். தம்மிடம் கொடுக்கப்பட்ட பண முடிப்பை அந்தச் சேவைக்கே கொடுத்து விட்டார்.

போப்பால் கிளைச் சங்கமானது லாலா முல்க்ராஜியின் மேற்பார்வையில் நடந்து வருகிறது மத்திய சங்கத்திலுமிருந்து பணம் பெறவில்லை. திரு. மேனாத் பணம் கொடுத்து உதவி செய்கிறார்.

பத்வாஸி சமஸ்தான சர்க்கார் தங்கள் பாடசாலைகளையும் கிணறுகளையும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டிருக்கிறார்கள். பன்னா சமஸ்தான அதிகாரிகளும் அஜ்யகாத் சமஸ்தான அதிகாரிகளும் ஹரிஜனங்களுக்கு வாடகை மோட்டார் பஸ்களில் பிரயாணம் செய்யும் உரிமையை அளிக்கவேண்டும். இன்னும் அஜயகாத், பிஜாவார், சர்க்ஹரி சமஸ்தானங்கள் ஹரிஜனப் பெண்களுக்கு பிரசவகால ரஜா அளியாமல் இருந்து கொண்டிருக்கின்றன.

திக்கம்கார் சமஸ்தானத்தில் ஒரு சமபந்தி போஜனம் நடந்தது. அதில் ஜாதி ஹிந்துக்களும் ஹரிஜனங்களும் தாராளமாகக் கலந்து கொண்டார்கள்.

மத்திய இந்திய ஹரிஜன சேவா சங்கத்தார் பாடசாலைகள், மாணவர் விடுதிகள், உதவிச் சம்பளங்கள், வைத்திய உதவி முதலிய இனங்களில் மொத்தம் செலவு செய்தது ரூ. 11 ஆயிரமாகும். ரூ 6 ஆயிரம் நிர்வாகத்துக்கும் பிரசாரத்துக்கும் செலவாயிருக்கின்றது. இந்தத் தொகை குறையவும் அந்தத்தொகை பெருகவும் வேண்டும். அதுவே நம்முடைய இலட்சியமாயிருக்க வேண்டும்.

வி. ஜி. தேசாய்.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை